aanmeegamalar.com வெளியிடும்

e-magazine
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

தீபாவளி சிறப்பு மலர்

1

திருப்புல்லாணி ஸ்ரீ ஆதி ஜெகநாத பெருமாள்



KRT
K.R THANGA MAALIGAI
GOLD • DIAMOND • PLATINUM • SILVER

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

K.R.தங்கமாளிகை

மகிழ்ச்சியான தருணங்களுக்கு உங்கள் KRT

98, சாலை தெரு, இராமநாதபுரம்–623501.

Ph: 8825657248, 9159600007 | www.krtjewellry.com

krthangamaligai | krthangamaaligai | K R Thanga Maaligai

செல்லப்ப சுவாமிகள் செய்த அற்புதங்கள்



செல்லப்ப சுவாமிகள்,சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகளின் சீடரும், சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் குருநாதருமாவார். செல்லப்ப சுவாமிகள், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தஞ்சாக்கூர் என்ற ஊரில் அவதரித்தார். தன் குருநாதர் போன்று, பல சித்துகள் செய்தவர்.

சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் மன்னார் குடியில் தோன்றி, கட்டிக்குளம்குவளை வேலி, புதுக்குளம் கிராமங்களில் கோயில்கள் எழுப்பி சித்துகள் பல செய்து, பக்தர்களுக்கு அருள்புரிந்தவர்.

அவர் வழிவந்த தஞ்சாக்கூர் சூட்டுக்கோல் செல்லப்ப சுவாமிகள், தங்கள் குரு ராமலிங்க சுவாமிகள் பெயரில் பல இடங்களில் மடங்களை நிறுவினார்.

ராமநாதபுரம், திருச்சுழி என்று வெவ்வேறு இடங்களில் ஆரிய சித்துகளைச் செய்து சஞ்சரித்து வந்த செல்லப்ப சுவாமிகள் ஒருநாள், ராமநாதபுரம் கண்மாய் மடக் குழியில் இறங்கினார். வெகுநேரம் அவரைக் காணாமல் அன்பர்கள் தவித்தனர்.

ஆனால் சுவாமிகள் அப்போது ராமநாதபுரம்அரண்மனை வாசலில் இருந்து கொண்டு ராஜாவுக்கு அவரது நோய்க்கான பச்சிலை மருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அன்பர்கள் இதைக் கண்டு அதிசயித்துப் போயினர்.அன்று முதல் ராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேது பதி அவரைப் பெரிதும் போற்றி வந்தார்.

இத்தகைய சிறப்புகளுடன் திகழ்ந்த செல்லப்ப சுவாமிகள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்த மாயாண்டி சுவாமிகள், அவரையே குருவாகக் கொண்டார். செல்லப்ப சுவாமிகளும் மாயாண்டியை அன்போடு தழுவி அவருக்கு உபதேசம் செய்து வைத்தார்.

கட்டிக்குளத்தில் இருந்த சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள், கையில் வைத் திருக்கும் சூட்டுக்கோல் நல்லவர்களுக்குநன்மை தருவதாகவும், தீயவர்களுக்குத் தண்டனைதருவதாகவும் இருந்தது.

ராமலிங்க சுவாமிகளின் காலத்துக்குப் பின்னர் இந்த சூட்டுக்கோல் அவரது சீடரான செல்லப்ப சுவாமிகளிடமும், அதன் பின் அவரது சீடரான மாயாண்டி சுவாமிகளிடமும் வந்தது. இன்றைக்கும் இந்த சூட்டுக்கோலை மாயாண்டி சுவாமிகளின் சமாதியில் தரிசிக்கலாம்.

சுவாமிகள் ஜீவசமாதி, பிர பல திருக்கோயில்கள் உடைய திருப்புல்லாணி, உத் திரகோச மங்கை ஆகிய இடங்களுக்கு, அருகில் உள்ளது. அடி யார்கள் பார்த்து வழிபட வேண்டிய ஒரு மஹான். தொடர்புக்கு – 09843287501, 9442751868

இராமேஸ்வர தீர்த்தங்களும் சிறப்புகளும்...!

1. மகாலெட்சுமி தீர்த்தம்: இது கிழக்கு கோவிலின் பிரதான வாசலில் அனுமார் சன்னதிக்கு எதிரில் தெற்கு பக்கத்தில் உள்ளது. இதில் நீராடுவதால் சகல ஐஸ்வர்யமும் பெறலாம்.
2. சாவித்திரி தீர்த்தம், 3. காயத்ரி தீர்த்தம், 4. சரஸ்வதி தீர்த்தம்: இம்மூன்று தீர்த்தங்களும் அனுமார்கோவிலுக்கு மேல்புறம் உள்ளது. இம்மூன்று நீராடுவதால் மத சடங்குகளை விட்டவர் சந்ததியில்லாதவர் இஷ்ட சித்தி அடையலாம்.
5. சேது மாதவ தீர்த்தம்: இதில் நீராடுவதால் ஸ்ரீராபிரானால் சகல லெட்சுமி விலாசமும், சித்த சக்தியும் பெறலாம்.
6. நள தீர்த்தம்: இதில் நீராடுவதால் சுரிய தேஜசை அடைந்து சொர்க்கலோக பதவி அடைவர்.
7. நீல தீர்த்தம்: இதில் நீராடுவதால் சமஸ்தாயக பலனையும் அடைந்து சொர்க்கலோக பதவி அடைவர்.
8. கவாய தீர்த்தம்: இதில் நீராடுவதால் சக்கு சாயம், கோபம் மனைவலினம், தேக ஆரோக்கியம் கிடைக்கும்.
9. கவாட்ச தீர்த்தம்: இதில் நீராடுவதால் நரகத்திற்கு செல்ல மாட்டார்கள். மன வலிமை, தேக ஆரோக்கியம், திட சரீரம் கிடைக்கும்.
10. கந்நமாதன தீர்த்தம்: இதில் நீராடுவதால் மகாதரித்திரம் நீங்கி ஐஸ்வர்ய சித்தியும் பெற்று பிரம்ம ஹத்தியாதிபாப நிவர்த்தி பெறுவர்.
11. சங்கு தீர்த்தம்: இதில் நீராடுவதால் செய் நன்றி மறந்த சாபம் நீங்கப் பெறும்.
12. சக்கர தீர்த்தம்: இதில் நீராடுவதால் ஊனம், குருடு, செவிடு ஆகியவை நீங்கி சௌக்கியம் அடைவர்.
13. பிரம்மாத்திர விமோசன தீர்த்தம்: இதில் நீராடுவதால் பிரம்மஹத்தயாதி தோஷங்களும், பாவங்களும் நிவர்த்தியாவதுடன், பில்லி சுனியமும் நீங்கும்.
14. சூர்ய தீர்த்தம்: இத்திர்த்தத்தில் நீராடுவதால் திரிகாலஞானமும் உண்டாவதுடன் ரோகங்கள் நிவர்த்தியாகும்.
15. சந்திர தீர்த்தம்: இதில் நீராடுவதால் ரோக நிவர்த்தி அகலும்.
16. கங்கா தீர்த்தம் 17. யமுனா தீர்த்தம் 18. காயத்ரி தீர்த்தம்: இம்மூன்று தீர்த்தத்தங்களும் நீராடுவதனால் பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவைகளும் அஞ்ஞானமும் நீங்கி முக்தி அடையலாம்.



19. சாத்யாம்ருத தீர்த்தம்: இதில் நீராடினால் தேவதாகோபம் பிராம்மணசாபம் நிவர்த்தியாவதுடன், சூரியமூர்த்தி, மோட்ச பிராப்தி ஆகியவை கிடைக்கும்.
20. சிவ தீர்த்தம்: இதில் நீராடினால் சகல சௌபாக்கியமும் கிடைக்கும்.
21. சர்வ தீர்த்தம்: இதில் நீராடினால் பிறவிக் குருடு, நோயும் நரை திரையும் நீங்கி வளமடையலாம்.
22. கோடி தீர்த்தம்: இந்த தீர்த்தமானது இராமர் லிங்கப் பிரதிஷ்டை செய்தபோது அபிஷேகத்திற்கு நீர் தேவைப்பட்டது. அதனால் ராமர் தன் அம்பின் நுனியை பூமியில் வைத்து அழுத்தினதால் அந்த இடத்தில் பூமியைப் பிளந்து கொண்டு நீர் வந்தது. அதுவே கோடி தீர்த்தம் எனப்படுகிறது. கோடி திர்த்தத்தில் நீராடியபின் இவ்வூரில் இரவு தங்கலாகாது என்பது சம்பிரதாயம்.





aanmeegamalar.com

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

படியுங்கள்... aanmeegamalar.com இதுவரை வெளிவந்த 185 e-book கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

சராணாகதி தத்துவத்தை உணர்த்தும் திருப்புல்லாணி ஆதி ஜெகநாதர்

ராமநாதபுரத்துக்கு தெற்கே 10கி.மீ. தொலைவில் உள்ள திருப்புல்லாணியில் பிரசித்தி பெற்ற ஆதி ஜெகநாதர் பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோவில் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.

மங்களாசாசனம் பெற்ற 108 திவ்யதேசங்களில் இது 44வது கோவிலாகும். ஆழ்வார்களில் திருமங்கையாழ்வாரால் 20 பாடல்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற புகழ் பெற்ற புண்ணிய தலம்.

இந்த கோவில் தீர்த்தம், மூர்த்தி, தலம் என்ற மூன்று சிறப்புகளுடன் புராணப் புகழ் பெற்றும், சரித்திர புகழுடன் சிறந்த திவ்ய தேசமாக விளங்குகிறது...

விஷ்ணுவின் அவதாரமான ராமபிரான் ஜெகநாதனை வணங்கி அவரால் கொடுக்கப்பட்ட வில்லைப் பெற்று ராவண சம்ஹாரம் செய்து சீதா பிராட்டியை மீட்க அனுக்கிரகிக்கப்பட்ட தலமாகவும், ராமபிரானை ராவணன் தம்பி விபீஷணன் சரண் அடைந்து இலங்கைக்கு அரசனாக முடிசூடப்பட்ட தலமாகவும்விளங்குகிறது...

கடற் கடவுள் தன் பத்தினியோடு ராகவனை சரணடைந்து தன் குற்றம் மன்னிக்கப்பட்ட இடமாகவும், சுகசாரணர்களுக்கு அபயம் அளித்து, புல்லவர், கண்ணுவர் போன்ற முனிவர்கள் ஆதிஜெகநாதரை சரணடைந்து பரமபதம்



பெற்ற தலமாகவும் திருப்புல்லாணி ஆதி ஜெகநாத பெருமாள் கோவில் விளங்குகிறது...

ஆகவே, இந்த தலம் சராணாகதி தருமத்தை அனுஷ்டிக்கக்கூடிய புண்ணிய ஸ்தலமாக திகழ்கிறது. குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இத்த லத்திலுள்ள மூர்த்தியை வணங்கி பகவான் பாதம் அடியில் அர்ச்சாரூபியாய் அமர பாக்கியம் பெற்ற பரிசுத்தமான அரசமர நிழலில் நாகப்பிரதிஷ்டை செய்து, நிவேதனம் செய்த பாயாசத்தை அருந்தினால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம்...

இதன் காரணமாக ஏராளமான தம்பதியர்கள் பெருமாளை தரிசிக்க வருகின்றனர். இத் தலத்தில் வழிபட்டால் கிரக தோஷங்கள் நீங்கும். தாயாருக்கு புடவை சாத்துதலையும், பெருமாள் சாமிக்கு துளசி மாலை அணிவித்தலையும் பக்தர்கள் பெரும் பாக்கியமாக கருதுகின்றனர். ராமர் சயன நிலையில் இருப்பது இக்கோவிலின் சிறப்பு அம்சம்...

எங்கும் காண இயலாத விசேஷ அசுவத்தமும் (அரசமரம்), நாகத்தின் மீது நடமாடும் சந்தானக் கண்ணனும், சிற்பக்கலையின் களஞ்சியமாக கிரீடம், பட்டாக்கத்தியுடன் காட்சியளிக்கும் தர்ப்பசயணன் ராமனும், ரசாயண சத்துக்கள் நிரம்பியசக்கர தீர்த்தமும் இத்தலத்தின் மாபெரும் சிறப்புக்கு சான்றுகளாய் திகழ்கின்றன...

கோவில் தல விருட்சமாக உள்ள அரசமரம் சன்னதியின் மேற்கில், வெளிப் பிரகாரத்தில் நாய்ச்சியார் சன்னதிக்கு பின் பக்கம் கம்பீரமாக காட்சி அளிக்கிறது. ஆற்று நீர், குளத்து நீர், கடல் நீர் என மூன்று நீர்ப் பெருமை பெற்ற தலமாக திருப்புல்லாணி ஆதி ஜெகன்னாத பெருமாள் சாமி கோவில் விளங்கி வருகிறது....

பழங்கால சிற்பக்கலையின் நுணுக்கங்களை கோவிலுக்குள் எங்கும் காண முடிகிறது. பெருமாள் சன்னதிக்கும் தாயார் சன்னதிக்கும் எதிரில் வெளிப்பக்கம் பக்தி உலாவு மண்டபத்தில் காணப்படும் சேதுபதிகளின் வண்ண வடிவங்கள், தானீகர்களின் பதுமைகளும் கண்ணைக் கவரும் வகையில் உள்ளது....

தர்ப்பசயன ராமன் திருமேனி அமைப்பும், அவருடைய நாபீ கமலத் தண்டின் அமைப்பும் பார்க்க பார்க்க பக்தர்களின் மனதை பரவசப் படுத்தும்.

பங்குனி மாதத்தில் ஆதி ஜெகநாத பெருமாள்சாமி பிரம்மோத்சவம், சித்திரையில்பட்டாபிராமன் பிரம்மோத்சவம், ஆடியில் சூடிக்கொடுத்த நாச்சியார் உற்சவம், ஆவணியில் திருப்பு வித்திரோத்சவம், மார்கழியில் பகல்பத்து, ராப்பத்து உற்சவங்கள், புரட்டாசியில்தாயார் நவராத்திரி உற்சவம், விஜயதசமி ஆகிய உற் சவங்கள் ஆண்டுதோறும் வெகு விமரிசையாக நடத்தப்படுகிறது....

இந்த கோவிலில் 2002, 2012ம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடந்தது. நடை திறக்கும் நேரம் தினமும் காலை 7.30 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு 12.15 மணி வரை நடை திறந்திருக்கும். அதன் பின்னர் நடை சாத்தப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்படும்...

நேர்த்திக்கடன்

புரட்டாசி சனிக்கிழமைகளில் ஆதி ஜெகநாத பெருமாளை தரிசிக்க கூட்டம் அலைமோதும். பக்தர்கள் சுவாமிக்கு துளசி மாலை சாத்தியும் தாயாருக்கு பட்டு சாத்தியும் வழிபடுவார்கள். தாங்கள் வேண்டியதை நிறை வேற்ற மனமுருகி வேண்டிக் கொள்வார்கள். வேண்டுதல் நிறைவேறியவர்கள் கோவிலுக்கு வரும் பக்தர் களுக்கு அன்னதானம் வழங்குவார்கள்.

ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை. ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

வாசுதேவா என்றால் வளம் பொங்கும்! வாசுதேவன் பாத்திரத்தில் ராசி பொங்கும்!!

வாசுதேவன் பாத்திரக்கடை

முகவையின் மாபெரும் பாத்திரக்கடை

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

கல்யாண சீர்வரிசைக்கு தேவையான பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர், கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும் வாங்க கைராசியான நிறுவனம்

12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம் செல்: 88074 08807

ராமேஸ்வரத்தில் அதிகாலையில் மட்டும் தரிசனம் தரும் மரகத லிங்கம்



ராமேஸ்வரம் ராமநாத சுவாமி திருக்கோவில் என்றாலே நம் நினைவுக்கு வருவது 22 தீர்த்தங்களும், பிரம்மாண்ட மான பிரகாரங்களும்தான். ஆனால், பெரும்பாலான பக்தர்கள் அறியாத ஒரு பொக்கிஷம் இந்த ஆலயத்தில் உள்ளது. அதுதான் ஆதிசங்கரர் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட "மரகத லிங்கம்".

இந்த லிங்கத்தின் சிறப்புகள் சில:

இது மிகவும் சிறிய வடிவம் கொண்டது என்றாலும், மிகுந்த சக்தி வாய்ந்தது. ஆதிசங்கரர் வழங்கிய ஐந்து லிங்கங்களில் இதுவும் ஒன்று என்று சொல்லப்படுகிறது.

இந்த மரகத லிங்கத்தை நாள் முழுவதும் தரிசிக்க முடியாது. தினமும் அதிகாலை 5:00 மணி முதல் 6:00 மணி வரை நடைபெறும் 'ஸ்படிக லிங்க' அபிஷேகத்தின் போது மட்டுமே இந்த மரகத லிங்கத்திற்கும் பூஜைகள் நடைபெறுகின்றன.

நவமணிகளில் ஒன்றான மரகதம், புத பகவானுக்குரியது. இந்த லிங்கத்தை தரிசிப்பதன் மூலம் கல்வியில் மேன்மை, தெளிவான சிந்தனை மற்றும் மன அமைதி கிட்டும் என்பது ஐதீகம். சித்தர்களும் ஞானிகளும் போற்றிய இந்த புண்ணிய பூமியில், அதிகாலையில் ஒளிரும் இந்த பச்சை நிற மரகத லிங்கத்தை தரிசிப்பது ஒரு உன்னதமான ஆன்மீக அனுபவம்.

நீங்களும் ராமேஸ்வரம் சென்றால், அதிகாலையிலேயே எழுந்து இந்த அரிய தரிசனத்தைப் பெறத் தவறாதீர்கள்!

ராமநாதபுரம் மீனாட்சி அம்மன் சொக்கநாதர் கோவிலில்

திருவாசக முற்றோதல் ஞான பெருவேள்வி விழா



இராமநாதபுரம் திருவேடம் திருக்கூட்ட சபை நடத்தும் திருவாசக முற்றோதுதல் ஞானப்பெருவேள்வி விழா வரும் நவம்பர் 29–ந்தேதி ஞாயிற்றுக்கிழமை கயிலை புனிதர் திருவாசக சித்தர் சிவத்திரு. தாமோதரன் ஐயா அவர்கள் நல்லாசியுடன்.

காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை நடைபெறுகிறது. இதில் தமிழகம் முழுவதும் இருந்து அடியார் பெருமக்கள் கலந்து கொள்கிறார்கள்.

ஆயிரக்கணக்காண அடியார் பெரும் மக்களுக்கு காலை, மதியம் அறுசுவை அன்னம்பாலிப்பு (அன்னதானம்) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

திருவாசக முற்றோதுதல் விழா

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் ராணி சேதுபதி திருமதி இராஜேஸ்வரி நாச்சி யார் அவர்களுக்கு பாத்தியமானதும் ராணி சேதுபதி திருமதி அபர்ணா அவர்களின் நிர்வாகத்திற்குஉட்பட்டதுமான அருள்தரும் மீனாட்சி உடனுறை அருள்மிகு சொக்கநாதர் திருக்கோவிலில்நடைபெறுகிறது.

திருவாசக முற்றோதல் ஞானபெருவேள்வி விழாவில் குன்றத்தூர் சிவமேபெறும் சிவனடி யார் திருக்கூட்டம் திருவோலக்கம் சபை சிவ. விஜயகுமார் ஐயா அவர்கள்திருவாசக முற்றோதல் ஞான பெருவேள்வி நிகழ்த்திறார்.

சிறப்பு அழைப்பாளர்கள்:

திரு. வி.தங்கத் துரை அவர்கள்.உச்ச நீதிமன்ற வழக்குரைஞர் திருமதி மீனாட்சி தங்கத்துரை அவர்கள். உருவாட்டி கொங் கந்திடல் (இ) டெல்லி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

திருமுறைகள் சிரசில் வைத்து நகர்வலம் கோட்டைவாசல் விநாயகர் ஆலயத்திலிருந்து திருக்கயிலாய வாத்தியம் முழங்க முகவை பெரிய சிவன் கோயில் சென்றடைதல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

அடியார்பெரும்மக்கள் முற்றோதல் தகவல் பெற அழைக்கவும்.9443286449,9442040390, 6385224334, இதற்கான ஏற்பாடுகளை ராமநாதபுரம் திருவேடம் திருக்கூட்ட சபை, ஸ்ரீ தக்ஷிண லலிதாம்பிகை தேவஸ்தானம் அறக்கட்டளை, ஸ்ரீ பாலகோபால பக்க சபா அறக்கட்டளை, பக்த பஜனை சபை தொண்டி மகாசக்தி புரம் ஆதி ஈஸ்வரர் சிவனடி யார் திருக்கூட்டம் வெளிப்பட்டணம் ஸ்ரீ ஆதிநாகலிங்கேஸ்வரர் குழுவினர் மற்றும் சிவனடியார்கள், சிவபக்தர்கள் இணைந்து செய்து வருகின்றனர்.

ராமநாதபுரம் தர்மசாஸ்தா



இராமநாதபுரம் வெளிபட்டிணம் செட்டியதெரு ஸ்ரீ தர்மசாஸ்தா ஐயப்பன் ஸ்வாமிக்கு தமிழ் மாத பிறப்பு தோறும் சபரிமலை ஐயப்பன் கோவிலில் நடைபெறுவது போல் இங்கும் நடைபெற்று வருகிறது.

மாத பிறப்பு அன்று அதிகாலை யில் நடை திறக்கப்பட்டு வழக்கம் போல் 5 நாட்கள் காலை 7:00 மணிக்கு மேல் அபிஷேகம்அலங் காரம் செய்து தீபாராதனைகாட்டி பக்தர்களுக்கு பிரசாதம் வழங் கப்படும் மேலும் இரவு 18"ம் படி பூஜை செய்து ஹரிவராசனம் பாடல் பாடி திருநடை சாற்றி பக்தர்கள் அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் நடைபெறும்.

ராமநாதபுரம் பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான ஐயப்ப பக்தர் கள் கார்த்திகை மாதம் விரதம் இருந்து இங்கிருந்து சபரிமலை செல்வது வழக்கத்தில் உள்ளது.

இங்கு தமிழ் புத்தாண்டு மற்றும் கார்த்திகை ஐயப்பன் பஜனை மண்டல பூஜை மகரவிளக்கு வழி பாடு நடைபெற்று வருகிறது.





தீபாவளி திருநாளில் நடைபெறும் லெட்சுமி குபேர யாகம் மகாபஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் நடைபெறுகிறது

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் விலக்கில் பஞ்சபூதேஸ்வரம் என்னும் இடத்தில் உள்ளது, ஸ்ரீ மகா பஞ் சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்.

இது முழுவதும் கருங்கல்லால் அமைக் கப்பட்டது. இந்த கோவில் கோபுரம் தமிழகசிற்ப கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இக் கோவில் வளாகத்தில் பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர் தவத்திரு ஞானசேகர் சுவாமிஜி ஜீவசமாதி பீடம் அருகில்உள்ளது. ஏராளமான பக்தர்கள் சுவாமி ஜி பீடத்தில் மனமுருகி வழிபாடு செய்து செல்கின்றனர்.

இந்த கோவிலில் ஒவ்வொரு மாதம் அமாவாசை தினத்தில் உலக மக்கள் நல மாக வாழவேண்டி ப்ரத்யங்கிரா யாகமும், பவுர்ணமி தோறும் திரு விளக்கு பூஜையும் நடைபெறும். கோவிலில் மற்றொரு சிறப்பம்சமான 24 மணி நேரமும் நடை பெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ள பக்தர்கள் இரவு, பகலாக குவிகின்றனர். வரும் தீபாவளி திருநாள்

8.11.2026ந்தேதி ஞாயிற்றுக்கிழமை அமாவாசை முன்னிட்டு அன்புடன் உலக மக்கள் ஆனந்தமாக வாழ





வேண்டியும் பதினாறு வகையான செல் வங்கள் கிடைக்க வேண்டி ஸ்ரீ லட்சுமி குபேர பூஜை யாகம் வழிபாடு நடைபெறுகிறது.

தினமும் காலை அன்னதானத்தில் வெண் பொங்கல் அல்லது உப்புமா, கேசரி, வடை வழங்கப்படுகிறது. மதியம் 2 வகை காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோர் உடன் நடந்து வருகிறது. சித்திரை தமிழ் வருட பிறப்பு, ஆடியில் சத சண்டி யாக பெரு விழாவில் மூன்று வேலையுமே சிறப்பு அன்ன விருந்து நவ ராத்திரி, தீபாவளி பண்டிகை பண்டிகையில் அறு சுவை விருந்தும் தை பொங்கலுக்கு பக்தர்களுக்கு கரும்பும் வழங்கப்பட்டு வருகிறது. பக்தர்கள் பசியோடு இருக்ககூடாது. என்பதற்காக எப்போதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இதற்காக அன்னதான குழு ஏதும் கிடையாது. பக்தர்களே இங்கு நடைபெறும் அன்ன தானங்களில் பங்கேற்று செல்லும் போது அன்னதானம் சப்ளை செய்யும் சேவையும் செய்கிற காட்சியை இங்கு காணலாம்.

இது பற்றி ஸாக்த மடாலயம் நிறுவனர் தவதிரு ஞானசேகர சுவாமிகள் கூறி உள்ளதாவது தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். வெளியூர்களில் இருந்து வருபவர்கள் பசியோடு சாமி கும்பிடக் கூடாது. பசியாறி சாமி கும்பிடும் போது வயிறு நிறைந்து மன நிறைவோடும் சாமி கும்பிட்டு செல்வார்கள். ஆகையால் இங்கு எறியும் அடுப்பு அனணக்கபடுவதில்லை மக்கள் எந்த நேரத்திலும் பசியாறி செல்லலாம்.

ஆலயத் தொடர்புக்கு: ஸ்ரீ மஹா பஞ் சமுக ப்ரத்யங்கரா வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம், செல்: 98428 58236



வழக்குகளில் வெற்றி தரும் வழிவிடும் முருகன்!

ராமநாதபுரம் நகரின் மையப்பகுதி யில், பேருந்து நிலையம் அருகே அமைந்திருக்கும் அருள்மிகுவழி விடும் முருகன் திருக்கோயில், பக்தர்களின் வாழ்வில் வரும் சகல தடைகளையும் நீக்கி நல்வழி காட்டும் அற்புதத் தலமாகும்.

'வழிவிடும் முருகன்' பெயர் காரணம் – வழக்கு நிவர்த்திஆரம்ப காலத்தில் அரசமரத்தின் கீழ் ஒரு வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டு வந்தது. அருகில் நீதி மன்றம் இருந்ததால், வழக்குகளில் சிக்கிய நிரபராதிகளும், சொத்துப்பிரச் சினை களால் வாழ்வாதாரம் இழந்து தவித்தவர்களும் இந்த வேலினை வேண்டி நின்றனர்.

பக்தர்களின் நியாயமான பிரார்த் தனையை ஏற்று, அவர்களுக்குவழக்கு களில் நல்வழியும் வெற்றியும் தந்த தால், இவருக்கு "வழிவிடும் முருகன்" என்ற திருநாமம் அமைந் தது.

பொதுவாக ஆலயங்களில் நுழை வாயிலில் விநாயகரும் முருகனும் தனித்தனியாக எழுந்தருளியிருப் பார்கள். ஆனால், இத்தலத்தின் கருவறையிலேயே முருகப்பெருமானும் விநாயகப் பெருமானும் இணைந்து அருள்பாலிப்பது மிக மிக அபூர்வமான மற்றும் அதிசயமான அமைப்பாகும்!

இக்கோயில் வளாகத்தில் 'சாயா மரம்' ஒன்று அமைந்துள்ளது.சனி பகவானின் தாயாரானசாயாதேவியின் அம்சமாகவே இம்மரம் போற்றப் படுகிறது.

இம்மரத்தை வழிபடும் பக்தர் களுக்கு, தனது தாயாரின் சொல்



லுக்குக் கட்டுப்பட்டு சனிபகவான் துன்பங்களைக் குறைத்து நன்மை களை வழங்குவார் என்பது ஐதீகம். இந்த அபூர்வ மரம் இலங்கையிலுள்ள புகழ்பெற்ற கதிர்காமம்முரு கன் கோயிலிலும் இருப்பது குறிப்பிடத் தக்கது.

சொத்துப் பிரச்சினைகளால் மனஸ்தாபம் அடைந்து நீதிமன்றப் படி ஏறும் சகோதரர்கள், இத்தலத்திற்கு வந்து முருகனை வழிபட்ட பின் சமாதானமடைந்து நல்வாழ்வு பெறு கிறார்கள்.

ராமநாதபுரம் பேருந்து நிலையம் அருகில் உள்ளது. தரிசன நேரம்: காலை 6:00 12:00 | மாலை 4:00 இரவு 9:00

முக்கிய விழாக்கள்: தைப்பூசம், பங்குனி உத்திரம், திருக்கார்த்திகை.

நம்பிக்கையோடு வேண்டிடும் பக் தர்களுக்குக் கந்தன் நிச்சயம் நல்வழி காட்டுவான்.





திருச்செந்தூர், ராமேஸ்வரம் சென்றால் கிடைக்கும் பலனை தரும்

பெருவயல் ரணபலி முருகன் கோவில்!



ராமநாதபுரம் மாவட்டத்தில்அமைந் துள்ள ஒரு அதிசயமான ஆலயம் பற்றித் தெரியுமா? திருச்செந்தூர் முருகனை வழிபட்ட பலனை ஒரே இடத்தில் தரும் தலம் தான் பெருவயல் சிவசுப்பிரமணிய சுவாமி (ரணபலி முருகன்) திருக்கோவில்.

இந்த ஆலயத்தின் சிறப்பம்சங்கள்:

அரிய சத்ரு சம்ஹார வேல்: உலகில் எங்குமே இல்லாத அதிசய மாக, இங்குள்ள வேலாயுதத்தில் முருகப்பெருமானின் திருவுருவம் பொறிக்கப் பட்டுள்ளது.

இந்த வேல் வருடத்திற்கு 10 நாட்கள் (மாசித் திருவிழா) மட்டுமே பக்தர்களின் தரிசனத்திற்காக வைக்கப்படும். கடலுக்கு அடியில் இருந்து சிலைகளை எடுக்க முயன்றவர்களுக்கு உடலில் ரணம் (காயங்கள்) ஏற்பட்டதாலும், பக்தர் களின் கர்ம வினைகளையும், கடன், பிணி போன்ற துன்பங்களையும் (ரணங்களை) பலியிட்டு நலம் தரு வதாலும் இவர் 'ரணபலி முருகன்' என்று அழைக்கப்படுகிறார்.

தல வரலாறு:

திருச்செந்தூர் முருகனின் பக்த ரான வயிரவன் சேர்வை என்பவரின் கனவில் முருகன் தோன்றி, தேவிபட்டினம் கடல் பகுதியில் தான் இருக்குமிடத் தைக் கூற, அங்கிருந்து கண்டெடுக்கப்பட்டவரே இந்த ரணபலி முருகன்.

திருச்செந்தூர் முருகனையும், ராமேஸ்வரம் ராமநாதசுவாமியையும் ஒரே இடத்தில் தரிசித்த புண்ணியத் தை வழங்கும் தலம் இது. இங்கு ராகுகேதுக்களுடன் முருகன் தனித் துக் காட்சி தருவதால், ராகு தோஷம் நீங்கும் என்பது நம்பிக்கை.

கோவில் முகவரி:

அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், பெருவயல், தேவிபட்டினம் வழி, ராமநாதபுரம் மாவட்டம். தரிசன நேரம்: காலை 8:00–12:00 | மாலை 4:00–இரவு 8:00



4.11.2026

உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், சமய நிகழ்வுகள் போன்றவற்றை

இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!

தொடர்புக்கு கொள்ளவும்

அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622

பிரசன்னா
செல்: 9442040390

9444228203

பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும்

கோட்டை வாசல் விநாயகர்



ராமநாதபுரம் அரண்மனை எதிராக உள்ள வீதியில் உள்ளது.

அருள்மிகு ஸ்ரீ கோட்டை வாசல் விநாயகர் கோவில். இக் கோவில் ராமநாதபுரம் பகுதியில் பிரசித்தி பெற்றது ஆகும். மன்னர்கள் ஆட்சி காலத்தில் ராமநாதபுரம் சமஸ்தானம் மன்னர்கள் கோட்டை விநாயகரை வணங்கி மக்கள் பணி பணி செய்து உள்ளதாக கூறப்படுகிறது. ராமநாதபுரம் பகுதியில் உள்ள

மக்கள் அனைவரும் தங்கள் இல்ல விழா தொடங்கும் முன்பு இங்கு வந்து பத்திரிகை வைத்து வழிபாடு செய்து செல்கின்றனர். பக்தர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றும் கோட்டை விநாயகர் கோவில் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சங்கடஹர சதுர்த்தி வழிபாடு மற்றும் விநாயகர் சதுர்த்தி விழா இக்கோவிலில் நடைபெறுகிறது. ராமநாதபுரம் அரண்மனை கடைவீதி பகுதி யில் கோட்டை விநாயகர் உள்ளதால் இங்கு வரும் பக்தர்கள் அனைவரும் தினமும் வந்து வழிபட்டு பணிகளை தொடங்கி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள

பிரசித்தி பெற்ற சிவாலயங்கள்

1. பன்னிரு ஜோதிர் லிங்கங்களில் பாரதத்தில் தெற்கில் உள்ள ஒரே ஜோதிர் லிங்கமான இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில்
2. மண் முந்தியோ மங்கை முந்தியோ என்ற மாணிக்கவாசக சுவாமிகள் வாசகத்தின் படி பூமி தோன்றிய போது முதன் முதலான சிவஸ்தலமான ஆதி சிவன் கோவிலான திரு உத்தரகோசமங்கை மங்களநாத சுவாமி திருக்கோயில்.
3. திருவாடானை ஆதிரெத்தினேஸ்வரர் திருக்கோயில்
4. ஸ்ரீ ராமபிரான் வழிபாடு செய்த தீர்த்தாண்ட தானம் சர்வதீர்த்தமுடையார் திருக்கோயில்
5. மாரியூர் பூவேந்தியநாதர் திருக்கோயில்.
6. நயினார் கோவில் நாகநாதர் திருக்கோயில் 64 திருவிளையாடல்களில் வலைவீசிய படலம் நிகழ்ந்த நாகதோஷ நிவர்த்தி ஸ்தலம்
7. எமன் வழிபாடு செய்த எமனேஸ்வரம் அருள்மிகு எமனேஸ்வரமுடையார் திருக்கோவில்
8. பார்த்திபன் என்னும் அர்ச்சுனன் வழிபாடு செய்த பார்த்திபனூர் சிவன் கோவில்
9. பரமக்குடி அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில்
10. ராமநாதபுரம் மீனாட்சி சொக்கநாதர் கோவில்



11. வெளிப்பட்டணம் முத்துராமலிங்க சுவாமி கோவில்
12. ஸ்ரீ சௌபாக்கிய நாயகி சமேத ரெத்தினேஸ்வரர் திருக்கோவில்
13. திருப்பாலைக்குடி மந்திர நாதர் திருக்கோவில்
14. தேவிபட்டினம் திலகேஸ்வர சுவாமி திருக்கோவில்
15. திருவேகம்பத்தூர் சிவன் கோவில்
16. திருமாலுக்கந்தன் கோட்டை சிவன் கோவில்
17. கமுதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில்
18. கீழக்கரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில்
19. சுந்தரபாண்டியன் பட்டணம் சிவன் கோவில்
20. கொழுவூர் ஆதி நாகநாதர் திருக்கோவில்
21. ராஜ சிங்கமங்கலம் சிவன் கோவில்



காசியிலிருந்து இராமேஸ்வரம் கொண்டுவரப்பட்ட

வெளிப்பட்டணம் ரெத்னேசுவரர்

வெளிப்பட்டணம் வித்தியாசமான பெயர் கொண்ட இத்தலத்தில்விளங்கிடும் ஈசன் மிகவும் விசேஷமானவர்....

இப்பகுதியில் வசித்த பக்தர்களால், பலநூற்றாண்டுகளுக்குமுன்உருவாக்கப்பட்ட சிவாலயம் தான், ரெத்னேசுவரர் உடனாய சௌபாக்ய நாயகி அம்பாள் திருக்கோயில், ஆரம்பத்தில் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள், தங்கள் வழிபாட்டுக்கென ஒரு கோயில் கட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, விநாயகர் ஆலயம் கட்ட தீர்மானித்தனர்.

அப்போது, செல்வந்தரானபக்தர் ஒருவர், சிவன் கோவில் கட்டிவழிபாடு செய்யுங்கள் என்றுபரமேசுவரனே தன் கனவில்தோன்றி கூறியதாகவும், அதற்காக தனக்கு சொந்தமான நிலத்தைத் தருவதாகவும் சொன்னாராம்.

அதைத் தொடர்ந்து கோயில் திருப்பணிகள் துவங்கப்பட்டு காசியிலிருந்து சிவலிங்கம் தருவித்து ரெத்னேசுவரர் என்று நாமம் சூட்டி, பிரதிஷ்டை செய்துள்ளனர்.

அம்பாள் திருவுருவச்சிலை செய்யப்பட்டதும், இங்கு வந்த ஆன்மிகப் பெரியவர் ஒருவரின் ஆலோசனைப்படி சௌபாக்யநாயகி என்று திருப்பெயர் சூட்டினராம். பின்னர் தெப்பக்குளம் அமைத்து, கல் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தி வழிபட்டு வந்துள்ளனர். விநாயகருக்கும் அரச மரத்தடியில் தனிக் கோயிலுமாகவும் அமைத்தும் ஆகம விதிமுறைப்படியும் வாஸ்து முறைப்படியும் சிறந்த பிரார்த்தனை தலமாக இத்திருக்கோயில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தல இறைவனுக்கு சிவந்தீசுவரர் என்ற நாமமும், இறைவிக்கு சௌந்தர நாயகி என்ற மற்றுமொரு நாமமும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சுவாமிக்கு வலப்புறம் கன்னி மூலையில் கணபதியும், மூலவர் கர்ப்ப கிருகத்தின் பின்புறமுள்ள லிங்கோத்பவரின் திருப்பார்வையில் சந்தான கோபாலகிருஷ்ணனும் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர்.

சுவாமி கோஷ்டத்தில் சாந்த சொருபமாக காட்சியளிக்கும் தட்சிணாமூர்த்தி பேரருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு வியாழக்கிழமையன்றும் இங்கு கூடும் பக்தர்கள் வெள்ளமே இதற்கு சாட்சி. கன்னிப்பெண்கள் நல்ல கணவனை அடைய விஷ்ணு துர்க்கைக்கு நெய் விளக்கு ஏற்றி சுக்ரவார மங்கள பிரார்த்தனை செய்து பயனடைகிறார்கள்.

இத்தலத்தில் மற்றுமொரு சிறப்பம்சமாக ஐயப்ப சுவாமி சன்னதி அமைந்துள்ளது. சபரிமலையில் நடை பெறுவதைப் போன்றே தமிழ்மாதம் முதல் ஐந்து தேதிகளில் நடைதிறந்து சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. கார்த்திகை 1 தேதி முதல் தை மாதம் 6ம் தேதி வரை மண்டல மகரவிளக்கு பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரதமிருந்து இங்கிருந்து இருமுடி கட்டி சபரிமலைக்குச் செல்கின்றனர். சித்திரை முதல் நாள் விஷுக்கனி தரிசனமும் சிறப்புற நடைபெறுகிறது.



அம்பாள் சன்னதி கோஷ்டங்களில் அம்பிகையின் மூன்று வடிவங்களான இச்சா, கிரியா, ஞானசக்தியர்அருள் பாலிக்கின்றனர். மங்கல வராஹி அம்மன், சனீஸ்வர பகவான், பக்தஆஞ்சனேயர், கல்யாணமுருகன், சூரியன், சந்திரன், நால்வர் சண்டிகேசுவரர் என அனைத்து மூர்த்திகளும் தனித்தனி சன்னதிகளிலும் அருள் பாலிக்கின்றனர்.

இங்குள்ள காலபைரவர் மிகுந்த கலையம்சத் துடனும் கண்ணைப் பறிக்கும் திருமேனியுடன் அருள் பாலிக்கின்றார். தேய்பிறை அஷ்டமி களில் சிறப்பு ஆராதனைகள் இவருக்கு நடத்தப்படுகிறது. சுவாமி உள்மண்டபத்தில் தனிச்சன்னதியில் அருள்பாலிக்கும் தெற்கு நோக்கிய நடராஜர் மிகுந்த கலையம்சத்துடன் காணப்படுகின்றார். மேலும் இக்கோயிலின் மணி மகுடமாக ராமநாதபுரம் சீமையில் பெரிய நந்தியாக இத்தல சுதை நந்தி தெப்பக்குள மேடையில் அமர்ந்து அருள்பாலிக்கின்றார். இராமேஸ்வரத்துக்கு அடுத்தபடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நந்தி என்ற சிறப்பினை இத்தலத்து நந்தி பெற் றுள்ளது.

பிற்காலத்தில் குன்றக்குடி அடிகளார் ராமநாதபுரம் வருகையில் போது இத்திருக்கோவிலுக்கு வந்து, சிறிய கோயிலாக இருந்தாலும் ஆகம முறைப்படி அமைந்துள்ள முழுமையான சிவன் கோயில் என்று பெருமையுடன் சொல்லி வழிபட்டுச் சென்றுள்ளார்கள்.

தினமும் காலை 6 மணி முதல் மிமி மணிவரையும் மாலை 4 மணி முதல்இரவு 8 மணி வரையும் நடை திறந்து வைக்கப்பட்டு, இரண்டு கால பூஜைகள் காரண ஆகம முறைப்படி நடைபெற்று வருகின்றன.தல மரமாக வில்வ மரம் உள்ளது. கோயிலுக்குள் தீர்த்தக்கிணறும் கோயிலுக்கு வெளியில் நந்தி மேடைக்குக் கீழே சௌபாக்ய தீர்த்தம் எனும் தெப்பக் குளமும் உள்ளன.

– முகவை பூ.பாலாஜி
இராமநாதபுரம்.

இராமநாதபுரம் நகரில் இருக்கும் சில முக்கியமான திருக்கோயில்கள்

- கோட்டைவாசல் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் திருக்கோவில்
- சந்தைக்கடை ஸ்ரீ வல்லபை விநாயகர் கோவில்
- அருள்மிகு ஸ்ரீ வழிவிடு முருகன் திருக்கோவில்
- குண்டுக்கரை ஸ்ரீ சுவாமிநாத சுவாமி திருக்கோவில்
- ஸ்ரீ மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவில்(பெரிய சிவன் கோவில்)
- ஸ்ரீ கோதண்ட இராமசுவாமி திருக்கோயில்
- ஸ்ரீ பால ஆஞ்சநேயர் திருக்கோவில்
- ஸ்ரீசௌபாக்ய நாயகி சமேத ஸ்ரீ ரெத்தினேஸ்வரர் கோவில் வெளிப்பட்டணம் செட்டியதெரு
- பர்வதவர்த்தினி உடனாய ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமி கோவில் வெளிப்பட்டணம்
- பிரம்மபுரீஸ்வரர் கோவில் நொச்சி ஊரணி
- சிவஞானபுரம் சிவன் கோவில்
- குமரய்யா கோவில்
- நீலகண்டி ஊரணி பர்வதவர்த்தனி இராமநாதசுவாமி கோவில்
- காசி விசாலாட்சி விஸ்வநாதர் தொன்னை குருநாத சுவாமி கோவில்
- ஸ்ரீநாகநாத சுவாமி கோவில்
- கூரிச்சாத்த அய்யனார் திருக்கோவில்
- சக்கரக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ தர்ம முனீஸ்வரர் திருக்கோவில்
- ஸ்ரீ காளிகா தேவி அம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி திருக்கோவில்
- ஸ்ரீ ராஜகாளி அம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ உதிர காளியம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ பிள்ளை காளியம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ வெட்டுடையாள் காளியம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ காயக்காரி அம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில்
- ஸ்ரீ ராஜ மாரியம்மன் திருக்கோவில் பெரிய மாரியம்மன்
- ஸ்ரீ வன சங்கரி அம்மன் திருக்கோவில்
- வெளிப்பட்டணம் அருள்மிகு அன்னை ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில்
- அரண்மனை ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி கோவில்



இராமநாதபுரம் நகரில் இருக்கும் 8 முக்கியமான சிவன் கோவில்கள்

1. மீனாட்சி சொக்கநாதர் கோவில் (பெரிய சிவன் கோவில்)
2. சௌபாக்ய நாயகி சமேத ஸ்ரீ ரெத்தினேஸ்வரர் கோவில் வெளிப்பட்டணம் செட்டியதெரு
3. பர்வதவர்த்தினி உடனாய ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமி கோவில் வெளிப்பட்டணம்
4. பிரம்மபுரீஸ்வரர் கோவில் நொச்சி ஊரணி
5. சிவஞானபுரம் சிவன் கோவில் குமரய்யா கோவில் பஸ் ஸ்டாப்
6. நீலகண்டி ஊரணி பர்வதவர்த்தனி இராமநாதசுவாமி கோவில்
7. காசி விசாலாட்சி விஸ்வநாதர் தொன்னை குருநாத சுவாமி கோவில்
8. நாகநாத சுவாமி கோவில்



தீபாவளிப் பண்டிகையும் சிறப்புகளும்

தீபாவளி என்றால் தீபங்களின் வரிசை என்று பொருள். ஒளித்திருநாள் என்று கூறுவதும் பொருந்தும். மக்களிடையே மிகவும் பிரபலமான பண்டிகை தீபாவளிதான். மதம், மொழி, கலாச்சாரம் இவற்றினால், ஏனைய பண்டிகைகளுக்கு மக்கள் காட்டும் ஆர்வத்தில் வித்தியாசமிருக்கலாம்.

ஆனால் எல்லா இனத்தவாராலும் ஒரே மாதிரி வரவேற்பை பெறும் ஒரு பண் டிகை தீபாவளி. தீபாவளியின் பொது வீடுகளி லும், கோவில்களிலும் அகல் விளக்குகள்ஏற்றி, தீப அலங்காரங்களில் அகல் விளக்குகள் அங்கங்கே ஒளி வீசிச் சிரித்துக்கொண்டிருக்கும்.

இதேபோல், 'திவாளி' பண்டிகை வட மாநிலங்களில் லக்ஷ்மி பூஜையாகக் கருதப்படு கின்றது. வியாபாரிகள் மற்றும் தொழில் நிறு



வனங்கள் அந்த ஆண்டின் புதுக்கணக்கை 'திவாளி' பண்டிகையின்போதுதான் ஆரம்பிப்பது வழக்கம்.

நரகாசுரன் என்ற கொடிய அரக்கனைக் கொன்று மக்களுக்கு விடுதலையும், மகிழ்ச் சியும் அளித்தார், மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீ



கிருஷ்ண பகவான். அவனைத் தான் கொல் லாமல், தன் மனைவி சத்தியபாமாவின் கைகளால் அவன் கொல்லப்பட வேண்டும் என் பதற்காகவே, போர்க்களத்தில் மயங்கித் தேரில் சரிந்து வீழ்ந்து மாயம் புரிகிறார், கண்ணன் (கிருஷ்ணன்).



தன் தாயைத்தவிரத் தனக்கு வேறு யாராலும் மரணம் ஏற்படக்கூடாது என்று வரம் பெற்றான், நரகாசுரன். எந்தத் தாயாவது தன் மகனைக் கொல்லுவாளா? ஆனால், சத்தியபாமாவுக்கோ, நரகாசுரன் தன் மகன் என்று தெரியாது. தெரியாதபடி மாயம் செய்து மயங்கியவர் கிருஷ் ணன்.

ஆகவே, கணவனைக் காக்க, தேரோட்டியாகப் போர்க்களத்துக்குச் சென்றிருந்த சத்தியபாமா, தன் வில்லை எடுத்து வளைத்தாள். அடங்காத கோபத்துடன், நரகாசுரனைக் கொன்று வீழ்த்தினாள். உயிர் பிரியும்போது ஞானம் பெற்ற அந்த அரக்கன், ஒரு வரம் கேட்டான். " என் மரண தினத்தை மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும்.என் கொடிய செயல்களால் இருண்டு கிடந்த இல்லங்களில் ஒளி விளங்க வேண்டும். மக்கள் நீராடி, புத்தாடை உடுத்தி, விருந்து உண்டு மகிழ்ச்சியாக இப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும்." என்று கேட்டுக்கொண்டான்.

நரகாசுரன் கொல்லப்பட்ட அத்தினத்தையே தீபாவளிப்பண்டிகையாகக் கொண்டாடுவதாகப் புராணங்கள் விளக்குகின்றன. அதனால், இத்தினத்தை, நரக சதுர்த்தி என்றும் அழைப் பார்கள்.

தீபாவளி பண்டிகை இந்தியாவின் பல் வேறு பகுதிகளில் வெவ்வேறு வழிகளில்கொண் டாடப்படுகிறது. ஆனால் அனைத்து இடங் களிலும் பொதுவாகக் காணப்படும் சில கொண்டாட்டங்கள்:

வீடுகளை சுத்தம் செய்தல்: தீபாவளிக்கு முன்பு வீடுகளை நன்றாக சுத்தம் செய்து, புதிய வண் ணங்களில் அலங்கரிப்பது வழக்கம்.

பட்டாசுகள் வெடித்தல்: தீபாவளியின் முக் கிய அம்சங்களில் ஒன்று பட்டாசுகள்வெடித்தல். பட் டாசு வெடிப்பது இருள் நீங்கி ஒளி வருவதற்கான அடையாளமாக பார்க்கப் படுகின்றன.

தீபங்கள் ஏற்றுதல்: வீடுகளில் தீபங்கள் ஏற்றி ஒளிரச் செய்வது தீமை நீங்கி நல்லது ஏற்படும் என்பதற்கான நம்பிக்கை நிலவுகிறது.

லட்சுமி பூஜை: லட்சுமி பூஜை என்பது லட்சுமி தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பூஜை, இந்த பூஜை நல்ல ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் தரும் என்பது நம்பிக்கை.

இனிப்புகள் மற்றும் பலகாரங்கள்: தீபாவளியின் சிறப்புக்குக் குறியீடாக பல்வேறு இனிப்புகளும், பலகாரங்களும் தயாரிக்கப்படுகின்றன. லட்டு, மைசூர் பாக், போன்ற இனிப்புகளுக்கு தீபாவளி காலத்தில் பெரும் வரவேற்பு உள்ளது.

தீபாவளியின் சிறப்புகள்

இருள் அகல ஒளி வரும் நாள்: தீபாவளி என் பது இருளை வென்று ஒளி வரும் நாளைக் குறிக்கிறது. வீடுகள், கோயில்கள் மற்றும் தெருக்கள் என எங்கும் விளக்குகள் ஏற்றப்பட்டு, இருளை விரட்டி ஒளியை வரவேற்கின்றனர்.

புது தொடக்கத்தின் அடையாளம்: தீபாவளி பண்டிகை புது தொடக்கத்தின் அடையாளமாகக் கொண்டாடப்படுகிறது. பழைய கசப்பு களை மறந்து, புதிய வாழ்க்கையைத் தொடங்கு வதற்கான ஒரு வாய்ப்பாக இது அமைகிறது.

குடும்ப ஒற்றுமை: தீபாவளி பண்டிகை குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடி கொண்டாடும் ஒரு சிறப்பு நிகழ்வாகும். இது குடும்ப உறவுகளை வலுப்படுத்துகிறது.

சமூக ஒற்றுமை: தீபாவளி பண்டிகை சமூக ஒற்றுமையின் அடையாளமாகவும் கொண் டாடப்படுகிறது. அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வது இதன் சிறப்பு அம்சமாகும்.

